

# க்ருபக்ம்

உனது பிறப்பின் அர்த்தம்
சாந்தியும் சமாதானமும்
ஆகட்டும்!

விலை ரூ. 3.00 மார்கழி 1988

Double

மார்கழி

1988

மலர் 9

இதழ் 3

வெளியீடு:

வடமாகாண

தெ. ப. பொ. கூட்டுறவு சங்கங்களின் சமாஜம்
330, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்,

தொலைபேசி: 22713

ஆசிரியர்:
கே. வி. நடராஜன்

அட்டைப்படம்
பக்கம் — 3

வடிவமைப்பும்
அச்சிடும்

ஸ்வர்ணம் பப்ளிசிரீஸ
5, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.


# புத்தாண்டு வேண்டுகோள்!

1989 ஆம் ஆண்டும் பிறக்கப் போகின்றது. முடிவுறப்போகும் 1988 லும் அதற்கு முந்திய ஆண்டுகளிலும் பட்ட துயரங்கள் போதும்; இனியும் பட முடியாது என்ற தமிழ் மக்களின் அவலக்குரலின் மத்தியில்.

'ஆண்டவரே! பிறக்கப்போகும் இந்தப் புத்தாண்டிலாவது ஓயாத எமது மரணபயத்திற்கும், பிரச்சினைகளுக்கும் ஓர் நிரந்தர முடிவு ஏற்படும் ஆண்டாக பிறக்க வேண்டுமே' என்று ஏங்கவாய்க்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் 1989 ஆம் ஆண்டு பிறக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த பல புத்தாண்டுகள் மிகத்துயரம் நிறைந்த ஆண்டுகளாகவே பிறந்தன—அவ்வாறே கழிந்தன. ஒவ்வொரு ஆண்டும் எதிர்பார்த்த அமைதியும் சுபீட்சமும் அருகி அருகி வந்து 88 ல் அடியோடு போய்விட்டது என்றே சொல்ல வேண்டும்.

பிறக்கும் ஆண்டுகள் அல்ல பிறக்கப்போகும் ஆண்டுகள் கூட யாருடைய தலையெழுத்தையும் நிர்ணயிப்பதில்லை. அரசியல் மாற்றங்களே அவற்றை நிர்ணயிக்கின்றன.

தென்னிலங்கை அரசியல் போக்குகளே தமிழ் மக்களின் தலையெழுத்தையும் நிர்ணயிக்கும் சக்தியாகும். அது மட்டுமல்ல அங்கே அவர்களுக்குள் ஒரு சிறு பிரச்சினை ஏற்பட

டால்கூட அது தமிழ் மக்களின் தலையிலேயே பேரிடியாக விழுந்து பொருளாதார ரீதியாகவும் சரி இன்னும் பல்வேறு வழிகளிலும் பூதாகாரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

ஆகவே, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல் அனுமானங்களை உற்று நோக்குகையில் நம்பிக்கை ஒளிக்கீற்றின் அணுப்பிரமாணம் கூட தூரத்தில் தானும் தென்படவில்லை எல்லாம் ஒரே இருள் மயமும் குழப்பமுமாகவே தென்படுகின்றன.

இந்தப் பின்னணியில் எமது தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைப்பாட்டை நோக்குகையில் திரிசங்கு சொர்க்க நிலையில் கிடந்து தடுமாறுவதைக் காண முடிகின்றது.

பதினைந்தே வயது நிரம்பிய இச்சங்கங்களின் நோக்கங்கள் மிகவும் விரிவுபட்டது தமிழ் மக்களின் பொருளாதார வளத்திற்கு பனையின் மூலவளத்தைப் பயன்படுத்தி பல பாரிய திட்டங்களை வகுத்துச் செயல்பட இருந்த வேளையில்,

வெண்ணெய் திரண்டுவர தாழி உடைந்த கதையாக அரசியல் சூதாட்டங்களும் கெடுபிடிகளும் அவற்றின் தாக்கங்களும் சங்கங்களின் ஆணி வேரையே அரிக்கும் அளவிற்குச் சென்றுள்ளன.

ஆகவே பிறக்கப்போகும் 1989-ம் ஆண்டிலாவது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பகடைக் காய்களாக்கி தமது அதிகாரத்தை நிலைநாட்ட எத்தனிக்காமல் அவர்களின் பொருளாதார பாரம்பரிய கலாசாரங்களைத் திட்டமிட்டு அழிக்காமல் அவர்களையும் தனித்துவமிக்க மனிதர்களாக வாழ வழி வகுக்க வேண்டும்.

இதுவே நாம் 1989-ம் ஆண்டில் ஏற்படவுள்ள அரசியல் மாற்றத்தினை ஏற்படுத்தப் போகும் அரசியலார்க்கு விடுக்கும் வேண்டுகோளாகும்.


**********



கற்பகம்

வாசகர்களுக்கு

எமது

நத்தார்

புதுவருட

வாழ்த்துக்கள்

1989

**********

அட்டைப்படம்

# உனது பிறப்பின் அர்த்தம் சாந்தியும் சமாதானமும் ஆகட்டும்!

ஆதியிலே கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார். அதிலுள்ள அனைத்தையும், படைத்து இறுதியில் அனைத்தையும் ஆண்டு நடாத்த தமது சாயலாக மனிதனைப்படைத்தார். மனிதன் கடவுளின் கட்டளையை மீறியதால் துன்பம் நோவு, சாவு ஆகிய தண்டனைகட்குட்பட்டான். பரலோகவாழ்வை இழந்தான். எனினும் கடவுள் தமது ஒரே பேறான திருக்குமாரனை மனுக்குலத்தை மீட்க உலகுக்கு அனுப்பினார். ஆதிமனிதன் கட்டிக்கொண்ட பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மனுக்குலத்தை விடுவித்து இரட்சிக்கவே கடவுள் தமது திருக்குமாரனை உலகிற்கு மனிதனாக அவதரிக்கச் செய்தார். யூதேயா நாட்டிலுள்ள பெத்லேகம் என்ற ஊரில் தாழ்மையும் கீழ்ப்படிவுமுள்ள மரியாளின் மடியில் மாட்டுத்தொழுவயதிலே பாலகன் யேசு பிறந்தார். யேசுவின் பிறப்பு முதன் முதலாக இடையருக்கே தேவதூதனால் அறிவிக்கப்பட்டு அவர்களாலே பாலக யேசு முதன் முதலாக வாழ்த்துக் கூறப்பட்டு ஆராதிக்கப்பட்டார்.

பாலகயேசுவின் பிறப்பு இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நிகழ்ந்த வேதாகம வரலாற்று நிகழ்வாகும். இந்த வரலாற்று நிகழ்வின் அடிப்படையிலே உலகெங்கும் ஆண்டுதோறும் மார்கழித் திங்கள் 25ம் திகதி நத்தார் திருவிழா (கிறிஸ்மஸ் திருநாள்) கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வரலாற்று நிகழ்வும் முக்கிய உண்மையை, உட்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமையாகவும் புற இனத்தாருக்கு இருள் அகற்றும் ஒளியாகவும் யேசு தோன்றினார். "யேசுவின் வருகையால் பள்ளத்தாக்குகள் நிரப்பப்படும், மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும். கோணலானவை நேராகவும், கரடுமுரடானவை சமவெளிகளாகவும் ஆக்கப்படும்" என்ற வேதவாக்கு நிறைவேறலாயிற்று. விடுதலையையும், அன்பையும், சமாதானத்தையும் கொடுக்கவே உலகிற்கு வந்தார். பகிர்ந்து வாழ்தலையும் பிறர் மீது அன்பு செலுத்துவதனையுமே தனது செய்தியாகக் கொண்டு வந்தார். "உன்னைப்போல் அயலவனை நேசி" என்றார். எதிரியையும் மன்னித்து அன்பு செலுத்தி முன் உதாரணமாக்கி வாழ்ந்தார். இறுதியில் அவர் மனுக்குலத்துக்காகவே தனது கொடிய சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார். இறைவனின் சித்தப்படி மூன்றாம் நாள் உயிர் பெற்றார்.

இன்றைய காலகட்டத்தில் சமய சடங்குகளும், வரலாற்று நிகழ்வுக்கான நினைவு விழாக்களும் பாரம்பரியத்தின் அடிப்படையிலும் வெளி ஆடம்பரங்களை மையமாக கொண்டுமே பெரும்பாலும் நடை

பெறுகின்றன. இதனுல் சமய சடங்குகளும் வரலாற்று நிகழ்வுகளை உணர்த்தும் உண்மைகளும் உட்பொருளும் முக்கியமற்றனவையாகவோ அல்லது முழுமையாக உணரப்படாமலோ உள்ளதையே காண முடிகின்றது. சமய சம்பிரதாயங்கள், வெளி அனுட்டானங்கள், கட்டுப்பாடுகட்கு, பணிந்து செல்வதை வெளிப்படையாக காட்டிக் கொள்ள விரும்பும் மனிதன், சமய சடங்கின் உட்பொருள் உணர்த்தும் உண்மையை நிஜவாழ்வில் கடைப்பிடிக்கத் தவறுகின்ருன். சமயங்கள் உணர்த்தும் உட்பொருட்கள் போதனைக்குரியதேயன்றி மனித வாழ்வுக்குரியதல்ல என்ற தவறுன மனப்பாங்கும் வளர்க்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் விழா என்றதும் புத்தாடை புனைதல், சிற்றுண்டிகள் விருந்துபசாரங்கள், வாழ்த்துக் கூறுதல், மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள், கோவில் வழிபாட்டிற் கலந்து கொள்ளல் என்ற குறுகிய வட்டத்துள் நினைவலைகளைச் சிக்க வைத்து விடுகின்ருேம் பாலகன் யேசுவின் பிறப்பின் நோக்கம், அவர் உலகிற்குக் கொண்டு வந்த செய்தி எல்லாம் அன்ருட வாழ்வில் இரண்டறக் கலந்து வாழ மறந்து விடுகின்ருேம். பணம், புகழ், அதிகாரம், கௌரவம் போன்ற வசதிகளுக்காக மனித நேயங்கள் மறுக்கப்படுகின்றன. இக்கட்டான வேளைகளில் இன்னலுறும் மக்கள் இரக்கமின்றி சுரண்டப்படுகின்ருர்கள். தட்டுப்பாடான காலங்களில் பங்கிட்டு வாழ வேண்டியவர்கள் பதுக்கிக் கொள்கின்ருர்கள். ஆயுத உற்பத்தி போட்டி ஆணவத்தையும் அகங்காரத்தையும் வளர்த்து சாந்தியையும், சமாதானத்தையும் சீரழிக்கின்றது. நாட்டின் பெயரால், இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், நட்புறவுகளின் பெயரால் யுத்த மேகங்கள் உலகத்தை சூழ்ந்துள்ளது. உள்ளவன் இல்லாதவனேடு பகிர வேண்டியதற்குப் பதிலாக, உள்ளவனேடே கூட்டு ஏற்படுத்துகின்ருன். ஏழ்மைக்கும் செல்வக் குவிப்புக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்துள்ளது. நித்தியமான ஆன்மீகத்தை விட அழியக்கூடிய இவ்வுலக காரியங்களிலே கவனஞ் செலுத்துகின்ருன்.

எனவே, எதிர்வரும் கிறிஸ்மஸ் விழாவை எதிர்கொள்ளும் எமது நாடும், தமிழ் மக்களும் இவ்விழாவின் உட்கருத்தை உணர்ந்து புதிய ஆண்டில் சாந்தியும், சமாதானமும் பெற்று பாலகன் இயேசுவின் வருகைக்கு அர்த்தம் கற்பிக்கக் கூடிய வாழ்க்கையை வாழ வரம் அருள வேண்டி, கற்பகம் தமது வாசகர்கட்கு நத்தார் புதுவருட வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகின்றது.

---

## கற்பகம் - கார்த்திகை 88 இதழ்

கற்பகம் கார்த்திகை மாத இதழ் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட மின் தடை காரணமாக வெளிவரவில்லை என்பதை வாசக நேயர்களுக்கு விநயத்துடன் தெரிவித்துக்கொள்கிருேம். — ஆசிரியர்

# பனை அபிவிருத்திக்கான அடிப்படை நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்

— ஆ. ந. இராசேந்திரன்
பொது முகாமையாளர்,
(வடமாகாண தெ. ப. பொ.
கூ. ச. சமாசம்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1. சமாசம் தமது தாய்ச் சங்கம் என்பதை அங்கத்துவ சங்கங்கள் ஏற்றுக் கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் தக்க வகையில் சங்கங்களின் பங்களிப்பினை வலுப்படுத்த வேண்டும்.

2. சமாச நிர்வாகம் பன்முகப் படுத்தப்பட்டு பரந்த பிரதிநிதித் துவத்திற்கும் வழி செய்யப்பட வேண்டும்.

3. சங்கங்கள் தனித்து மேற் கொள்ள முடியாத பாரிய அபி விருத்தித் திட்டங்களை பொறுப் பேற்று நிறைவு செய்யக் கூடிய நிதி, ஆளணி வசதிகளை ஏற்ப டுத்துதல் வேண்டும். மற்றைய ஊக்குவிப்பாளருடன் தொடர்பு கொண்டு புனர்வாழ்வு, புனர் அமைப்பு நடவடிக்கைகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு இணைப்பு அமைப்பாகச் செயற்படுதல்.

(ஈ) யாழ் மாவட்ட வடிசாலை கூட்டுறவுச் சமாசம்;

இது இக்கம் வடிசாலையை நிர் வகிக்க அமைக்கப்பட்ட கூட்டு றவு நிறுவனமாகும். இதன் அங் கத்தவர்களாக 18 தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச் சமா சத்தின் இயக்குனர் சபை 07 பேரைக் கொண்டிருக்கும். இதில் நால்வர் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவர். மிகுதி மூவர் கூட்டுறவுத் திணைக்களத் தால் நியமிக்கப்படுவர். அரசு மூவரை நியமிக்கும் போது பனை அபிவிருத்திச் சபை, வட மாகா ணத் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகிய நிறுவனங்களுடன் கலந்து ஆலோ சித்து இந் நியமனங்களைச் செய் வது இத்துறையின் வளர்ச்சிக்கு உதவும்.

மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் குறிப்பான ஒரு நோக் கத்திற்காக இணையும் போது இப்படியான சமாசங்கள் பொருத் தமான அடிப்படை நிறுவனங்க ளாக அமையும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களை ஊக்குவிக்கும் போது கூட்டுற வுத் திணைக்களத்தின் பங்களிப் பைப் பற்றியும் சிந்திக்க வேண் டும். கூட்டுறவு ஸ்தாபனங்களை

ஆக்குதல், அவற்றை வழி நடத்துதல், கட்டுப்படுத்துதல், கணக்காய்வு செய்தல் ஆகிய துறைகளில் கூட்டுறவுத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இத்திணைக்களத்தின் சட்ட திட்டங்கள் அதிகாரிகளின் அதிகாரப் பிரயோகத்திற்கு ஏற்ற வகையில் வரையப்பட்டுள்ளன. இத் திணைக்களத்தினரும் எதிர்கால புனரமைப்பு, புனர் வாழ்வு நடவடிக்கைகளிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் முழுவதாக ஈடுபடக்கூடிய வகையில் பங்காற்றக் கூடிய புரிந்துணர்வையும், அக்கறையையும் உருவாக்க வேண்டும்.

(உ) பனை அபிவிருத்திச் சபை;

பனை அபிவிருத்திச் சபை 1978-08-18ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முதலில் பெருந்தோட்ட அமைச்சின் கீழும் பின் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழும் செயற்படுகின்றது. இது சட்ட முறையான சபை ஒன்றாகும்.

பனை அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகள் எதிர் கால வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் விரிவு படுத்தப்பட வேண்டும். இச் சபையை ஒத்த மற்றைய சபைகளின் நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் பொழுது இச்சபைக்குக் கிடைக்கும் நிதி வசதிகளும், மற்றைய அரச நலன்களும் மிகவும் சொற்பமாகும். எனவே இவற்றை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத்திப் பணிகளை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

07 பனம் பொருள் உற்பத்தியாளர்;

இத்துறையில் நிறுவனக் கட்டமைப்புக்கள் இல்லை என்பதை கண்டுள்ளோம். எனவே இத்துறையில் புதிதாக அமைப்புக்களை உருவாக்க வேண்டும். ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கும் பகுதிகளில் கிராம சேவையாளர் பிரிவு வாரியாக பனம் பொருள் உற்பத்தியாளர் சங்கங்களை உருவாக்க வேண்டும். பின் இது வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் விரிவு படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஆரம்பத்தில் இவை மகளிர் சங்கங்களாக உருவாக்கப்பட்டு இத்துறையில் ஈடுபடக் கூடிய ஒரு சில ஆண்களையும் பின்னர் சேர்த்துக் கொள்ளக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும். இதனை முன் குறிப்பிட்டது போல சில கடினமான கைப்பணி வேலைகளுக்கும், சாறு சம்பந்தமான நடவடிக்கைகளுக்கும், ஆண்களின் சேவை அத்தியாவசியமானதாகும். ஒரு சில ஆண்களை இச் சங்கங்களில் சேர்ப்பதன் மூலம் பெண்களின் பெரும்பான்மைக்கு அல்லது அவர்களின் முகாமைத்துவத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

இச்சங்கங்களை உருவாக்குவதற்கு கிராமிய மட்டத்தில் செயற்படும் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற அரச சார்பற்ற — தன்னிச்சையான சமூக சேவை நிறுவனங்கள் — நிறுவனங்களின் சேவையையும், கிராம சேவையாளர்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் வசதியாக கூட்டுறவுச் சங்கங்களாகவோ அல்லது வேறு சட்ட ரீதியான அமைப்புக்களாகவோ பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

இவற்றை ஆக்குவதற்கான ஊக்குவிப்பாளர்களாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களும்,, சமாசமும், பனை அபிவிருத்திச் சபையும் செயற்பட முடியும். இச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப மூலதனத்தை கடனாகவோ / கொடையாகவோ அங்கத்தவர்களுக்கு அளிப்பதற்கும் நிதி வசதிகளை உருவாக்க வேண்டும்.

8. பனை வளர்ப்போர் (பனைச் சொந்தக்காரர்)

பனை அதிகமாக கிடைக்கும் வளமாக இருந்தாலும், எதிர்காலத் தேவைக்கு அவை பெருமளவில் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இச் சந்தேகத்திற்கான காரணம் இருக்கும் மரங்களை கண்டபடி தறிப்பதும், புதிய பனைகளை வளர்க்க அதிகளவு அக்கறையின்மையுமே யாகும்.

புதிய பனந்தோப்புக்களை உருவாக்கவும், இவற்றைப் பாதுகாப்பதற்கும் பனை அபிவிருத்திச் சபை எடுத்துவரும் நடவடிக்கைகள் மட்டும் போதுமானவை என்று கூறிவிட முடியாது. எனவே தற்போதைய பனைச் சொந்தக்காரர்கள் மத்தியிலும் இத்துறையில் ஆர்வமுடையவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் அவர்களை நிறுவனப்படுத்துவதன் மூலமே நாம் எதிர் பார்க்கும் இலக்கை அடைய முடியும்.

இத்துறையில் 1987ஆம் ஆண்டில் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பனை அபிவிருத்திச் சபை, கூட்டுறவுத் திணைக்களம், நலன் விரும்பிகள் ஆகியோரைக் கொண்டு இயக்கிய திட்டமிடல் குழுவின் பங்களிப்பை ஒரு முன்னோடியாகக் குறிப்பிடலாம், பின்வரும் சேவைகளை மனதிற் கொண்டு பனை வளர்ப்போர் சங்கங்களை அமைப்பதற்கு இக்குழு தீர்மானித்தது.

1. பனைச் சொந்தக்காரர்களை நிறுவனப்படுத்துதல்.

2. நிறுவனப்படுத்துதல் மூலம் பனைகளைப் பாதுகாத்தல்.

3. இருக்கும் மூலவளத்தை உச் சமாக பயன்படுத்வதுதற்கு உதவி செய்தல்.

4. பனையின் பயனளிக்கும் தன் மையை அதிகரிக்கச் செய் யும் புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்தல்.

5. பனை வளர்க்கக் கூடிய புதிய நிலங்களைக் கண்ட றிந்து புதிய பனந்தோப் புக்களை உருவாக்குதல்.

6. புதிய பனந்தோப்புக்களை உருவாக்குகையில் சமுதா யத்தில் பின்தங்கிய நிலம் அற்றவர்களைத் தெரிவு செய்து புனர் வாழ்வு, புது வாழ்வு அளித்தல்.

7. பனைச் சொந்தக்காரர்க ளுக்கும், பனையினை தமது ஜீவனோபாயத்திற்குப் பாவிப்பவர்களுக்கும் இடையே ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கு உதவி செய்தல்.

பனை வளர்ப்போர் சங்கங்கள் கிராம சேவையாளர் பிரிவுக ளில் ஆரம்பிக்கப்பட்டு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங் கங்களின் எல்லைப் பரப்புகளில் ஒன்றிணைக்கப்பட வேண்டும். இச்சங்கங்களை இயக்கும் நடை முறை விதிகளை சட்ட வலுவுள் ளதாக பனை அபிவிருத்திச் சபை யின் மேற்பார்வையில் தயாரிக்க வேண்டும்.

இச் சங்கங்களின் ஊக்குவிப் போராக தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்கள், அவற் றின் சமாசம், பனை அபிவிருத் திச் சபை ஆகியவை இயங்கும்.

மூன்று விதமான அடிப்படை அமைப்புக்களை நாம் இனம் கண் டுள்ளோம். இவற்றை ஏதாவது ஒரு மட்டத்தில் இருந்து முழு மையான செயற்பாட்டை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். பனை அபிவிருத் திச் சபை, சமாசத்தின் உதவி யுடன் இதனை நிறைவேற்ற முடியும். (முற்றும்)

# 'பெட் ரைம் ஸ்ரோரி'

பெட்ரைம் ஸ்ரோரி'' படுக்கை வேளைக் கதைகள் என்பதா கும். இப்படி என்றதும் ஆபாசமாக நினைத்துவிடக் கூடாது. ஆங் கில இலக்கியத்தில் குழந்தைகளுக்காகவே இக்கதைகள் எழுதப்படு கின்றன. நித்திரைக்காகப் புரளும்போது பெரியவர்கள் கூட இக் கதைகளை வாசிக்கின்றார்கள். இக்கதைகளை வாசித்ததும் அவர்களை அறியாமலேயே தூங்கி விடுகிறார்களாம். பிரித்தானியா நாட்டைச் சேர்ந்த 'ஆர்தர் எஸ்மெக்ஸ் வெல்' என்பவர் இக்கதைகளை எழுதி உள்ளார்.

அரியாலை - அரஸ்

# ஒன்றுக்குள் ஆயிரம்

கே. வீ. என்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

'இப்ப ஏன் முட்டைக் கண்ணீர் விழுத்தி அழுகிரு எண்டு தெரியவில்லே? உந்தப் பம்பிடுசிங்கி பனேயைப்பிடுங்கிப் பெட்டைக்கு அப்ப குருகுருப்புத் தாங்காமல் அவரோடை வாணம் விட்டுக் கொண்டோடி வந்தவ. அவற்றை வெள்ளேத் தோலிலேயும், நைலோன் சட்டையிலேயும் மயங்கி விட்டாவாக்கும். இல்லாட்டிக்கு, எடி வேசைக்குமரி, நீ பத்காம் வகுப்பெல்லே படிச்சனி? உந்தச் சாந்தேப்பை பிடிக்கிறவனேடை, அதுகும் உன்ரை வீடு கட்ட வந்தவனேடை கூடிக் கொண்டோடி வாறியெடி? சரி, அதுதான் போகட்டும். ஒரு குணமானவன், நல்லவன் நறியவனேடை கூடிக் கொண்டு வந்தியேடி? உதுகள் சேறு கண்ட இடத்திலே மிரிச்சுத் தண்ணி கண்ட இடத்திலே கழுவிற காவாலி விடுகாலியோடை அது 'சூ' எண்டவுடனே கிளம்பிவிட்டிஜேடி . . . கொண்டோடி.

ஏன்? — அந்தச் சினிப்பயலும் நல்லாத்தானும் மேசன் வேலே செய்வானும். ஒரு நாளேக்கு ஐம்பதோ நூறே எண்டு கூட உழைப்பானும். அதுசரி உந்தக் கட்டு வேலே என்ன நெடுகவா வாற தொழில்? ஒரு கிழமைக்கு வேலேயெண்டால் ஒன்பது நாளேக்கு சும்மாவும் நிக்க வேண்டி வரும். உவன் கட்டிக்குடுத்த வீடுகள்தானும் உங்கினே கிடக்கிற பென்னும் பெரிய வீடுகளெல்லாம். இஞ்சை பார். அவை சகவாசம் செய்யிற கொட்டிலே? அது மேயாமல் கொள்ளாமல் அடைப்புத் திறப்பின்றிக் கிடக்கிற அலங்கோலத்தை. உந்தத் தொழில் துறவுகாறங்களுக்கு தரித்திரமும் விட்டுப் பேசகாதாம். . . . ம் ...

எண்டாலும் உவன் புழுக்கைப்பயல் கூடுவாரரோடை கூடித் தான் வலுவாக் கெட்டுப்போனுன். அண்டடிச்சு அண்டு வாயிலை போடுற உவனுக்கு இருக்கிற மேட்டிமையான பேச்சையும் போக்கையும் நினைச்சால்தான் . . . . . 'முதலை இல்லாத குளத்துக்கு தவளை அதிகாரமாம்' எண்டு என்னம்மோ சொல்லுங்கள். அந்தக் கணக்காத்தான் உவனும். தறுதலை. அஞ்சு மூண்டு நாளைக்குள்ளை அவள் கொண்டு வந்த காதான் கழுத்தான் மூக்கான் எல்லாத்தையும் அறுத்திடிச்சு போட்டு அதிலை நல்ல வாய்க்கிதமா நல்லாத் திண்டு குடிச்சு குசாலா வசுக்கோப்பும் பாத்துப் போட்டு . . . ம் . . கடவுளும் கொஞ்சக் கொஞ்ச நாளைக்குத்தான் உவர்தரவளிக்குக் குடுத்துச் சோதிச்சும் பாக்கிறது. உவைக்கு இடையிலை அதுக்குதியன் வந்து தெய்வத்தையும் மதிக்காமல், மனிசரையும் மதிக்காமல் என்னை விட்டவர் ஆர்? — எண்ட ஆணவத்திலை திரிஞ்சால், எல்லாம் நாலு மூண்டு நாளையில் ஆட்டம்தான்.

ஏன்? — அவன் தகப்பன் செல்லன் இரண்டு மூண்டு கள்ளுக் கொட்டிலுகளும் வைச்சுக் கொண்டு வலு நல்லாத்தானுமே இருக்கிறுனும். பெரிய செட்டி வத்தகன் மாதிரி இரணைப் பட்டுச் சங்கிலியும், மோதிரங்களுமாக வலு எடுபிடியாக காரும் வைச்சுக் கொண்டு திரியிறுனும்.

ஏன்? — இவள் பெட்டை பூரணத்தின்ரை தேப்பன் வைரமுத்தன் எண்டாப்போலை என்ன சின்னன் பொன்னனுன ஆளோ? அவன் இவையள் எல்லாருக்கும் ஒரு படி மேலாலை உள்ளவனும். எண்டாலும் எடுபாடோ, படாரம்பமோ மருந்துக்கும் அவனெட்டைக் கிடையாதாம். தான் ஒரு பெரிய தனவந்தன் எண்டிற சங்கதியை வெளியாலை காட்டிக் கொள்ளாத மாதிரி இண்டைக்கும் பிறங்காலுக்கு மேலைதானும் வேட்டி துணி கட்டுவானும். ஒரு நலமுண்டுச் சால்வையைக் கூடத் தோளிலை போடாமல் போத்துக் கொண்டுதானும் திரிவான். தாளெனுடுங்கத் தன் குலமுயரும் என்ற போக்கானவன் போலை கிடக்கு.

ஏன்? — அவள் பெட்டை பூரணத்தின்ரை தாய் தான் செல்லாச்சி, ஒட்டிப் பதுங்கி மகளைப் பார்க்கிறதுக்கு இஞ்சை வாறவள் தானே. உரிச்சு வைச்சு சுத்தம் சுவம் தாயும் மகளும் ஒரே சாங்கமும் அச்சும்தான். இந்த வேசைக்குமரி பம்பிடுசிங்கி பனையைப் பிடுங்கிக்கு அதுகள் தேடித் திரட்டி வைச்சிருக்கிறதெல்லாத்தையும் அனுபவிக்கக் குடுத்து வைக்கவில்லை. மூத்த பெம்பிளைப்பிள்ளையள் மூண்டுக்கும் பெரிய பெரிய உத்தியோகத்தங்களைக் கட்டிக் குடுத்து கரை சேத்துப் போட்டானும். இவள் பூரணம் பெடியனுக்கு அடுத்த

கடைக்குட்டிப் பெட்டையாம். திருகோண நட்சத்திரத்திலே பிறந்ததுகள் ஊரை உலகத்தை ஒரு கோணமாக ஆளுங்களாம். இவள் வேறை ஒரு கோணத்திலே வந்து கிடந்து அல்லல்படுகிறாள் பெட்டை. இவளுக்குத்தானுமே அந்த வீட்டையும் இப்ப புதிசாகக் கட்டத் தொடங்கினவன் தேப்பன். இந்தக் கொண்டோடிக் குமரி அந்த வீடுகட்டப் போனவன்ரை தலப்பிலே பிடிச்சுக் கொண்டோடி வந்து கிடந்து சுடுபடுகிது.'

"கொம்மாவட்டைக் கேட்கிறது தானே யெடி? உனக்குத் தர வேண்டிய உன்ரை பங்கு சீதனத்தை கொக்காவைக்குக் குடுத்த மாதிரி உன்ரை பங்கையும் தரச் சொல்லிக்கேள்."

"இது ஒரு புதுக் கதையாக்கிடக்கு. உன்ரை ஆக்கள் சொல்லித் தந்தவையோ? நல்ல சதித்திட்டம் தான். சீதனம் கொண்டு வந்தால் என்னைச் சேர்க்கினமாமோ? உனக்கு வெட்கம் ரோசம் இல்லையே உப்பிடிக் கேட்கிறதுக்கு? பேடிகளுக்கும் தான் மீசை முளைச்சிடுது. கரப்பத்தான் பூச்சிக்கு மீசை இருக்கிறமாதிரி. அண்டைக்கு என்ன சொல்லி என்னைக் கூட்டி வந்தனி? 'என்ரை ஆக்களோ உன்ரை ஆக்களோ ஆரெண்டாலும் சேர்த்தாலும் சரி, சேர்க்காவிட்டாலும் சரி. என்ரை உடம்பிலே ஒரு சொட்டு இரத்தம் இருக்கிற வரையிலே உன்னைக் கண் கலங்காமல் பார்ப்பன் பூரணம்' உவையின்ரை காசு பணத்திலே ஒரு செப்புக்காசு கூட எனக்குத் தேவையில்லை, அப்படி இப்படியெண்டு எத்தனை பசப்பு வார்த்தைகள் சொல்லிக் கூட்டி வந்தனி? இப்ப கேட்டதை அண்டைக்கே கேட்டிருந்தால் எல்லாவற்றிலும் வலு முழிப்பாக இருந்திருப்பன்."

"அதெல்லாம் அப்போதையில் ஞாயமடி. இது இப்போதைய ஞாயம் தெரிஞ்சுதே! கொப்பன் என்ன இல்லாதவன் செல்லாதவனே? கொக்காளவைக்குக் குடுத்த மாதிரி உன்ரை சீதனப் பங்கையும் போய் வாங்கிக் கொண்டு வா. தெரிஞ்சுதே!"

"போதைகள் நேர காலத்துக்கேற்ற மாதிரி வேலை செய்யும்— வித்தியாசப்படுமெண்டு எனக்கும் இப்பதான் தெரியுது. உன்ரை ஞாயப்படி, அன்றையது காமப் போதை. அது இப்ப தீர்ந்திட்டுது. இப்போதைய போதை, மதுப் போதையும், சீதனப் போதையும். சீ ! நீயும் ஒரு மனுஷனா?"

"ம்... பண்ணிப் போச்சு. சீதனமல்லே கேக்கிறான் புழுக்கையன். 'வல்லாணத்துரையே என்ரை வடிவான மாப்பிளையே ...' எண்டொரு ஒப்பாரி சொல்லத்தான் மனம் வருகுது. 'கிளியை வளர்த்து பூனைக்கு இரையாக்கி விட்டமே' ஒராறு கண்ணீர் விட்டு

ஒப்பாரி வைச்சுக் கொண்டிருக்கிறுள். இந்தச் சிணி, பங்கு வீத மாக சீதணத்தையல்லே வாங்கி வரச் சொல்லி நிக்குது. வெட்கம் கெட்ட தூமை தூ .. இந்தக் காலத்துப் பெடி பெட்டையின்ரை ஒட்டமும் பாட்டமும் உப்புடியல்லே கிடக்கு. மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாளெண்டு அறியாமலே சொல்லி வைச்சான் அந்தக் காலத்தவன். பெடியளின்ரை விறைப்பு தீர்ந்தவுடனே தான் சீதணத்தைக் கொண்டு வரச் சொல்லி முறைக்குதுகள். ஒரு பெண்ணை வைச்சுக் காப்பாற்றி ஒரு வயிறு சோறும், மானத்தை மறைக்க ஒரு துணியும் குடுத்துக் காப்பாற்றி கண் கலங்காமல் பார்க்கத் தெரியாததுகளுக்கெல்லாம் ஒரு பெம்பிளையும் வேண்டிக் கிடக்கோ? சிணியள் தூ...

ஓ, உந்த ஒடுகாலிக் குமரியளுக்கும் உதுகும் வேணும் இன்ன மும் வேணும் தான். உவையின்ரை வண்டவாளத்தை நல்லாத் தெரியாமல் சும்மா மேனி மினுக்கைக் கண்டு ஆழ்ந்தளவிட்டுப் பாராமல் தான் சாக மருந்து குடிக்கிறன் கணக்கிலை ஓடி வாற வைக்கு உது காணுது தான்.

மிருக சாதியிலை யானை ரொம்ப உயர்ந்த குணமுள்ளதாம். ஒரு பெண்யானை எல்லா ஆண்யானையோடையும் போகத்துக்குப் போகா தாம். தன்னைத் தூக்கி விடக் கூடிய கொம்பன் யானையோடை தான் அது உடன்படுமாம். இந்தக் காலத்துப் பெடியள் அலியன் யானைகள் மாதிரி அமர் தீர்ந்தவுடனே பெண் யானையை அப்பிடியே விட்டிட்டுப் போகப்பாக்குதுகள்.

என்ரை இவர், அது கொம்பன் யானைதான். உப்புடி ஒரு நாளாவது கொப்பன் கோத்தையட்டைப் போய் சீதணத்தை நினைச்சு சீதண பாதணத்தை வாங்கிக் கொண்டு வாடி எண்டு சொல்லி இருக்குமே? அண்டைக்கிருந்ததுகள் தங்கடை கைகாலை நம்பி தங்களுக்கெண்டு ஒரு பெண்ணையும் தங்கடை பாட்டிலை எடுத்து வைச்சுக் கொண்டு சீவிச்சுகள். இதுகள் சிணியள், 'ஆற் றையும் நெய்யே என் பெண்டாட்டி கையே' எண்டு ஆற்றையும் தேட்டத்திலையல்லோ குசாலடிக்கப் பார்க்குதுகள். சீதணக் காசை வேண்டியல்லோ காரும் சயிக்கிளும் ஓடப் பார்க்குதுகள். பார்க்கிற தென்ன? இப்ப யாழ்ப்பாணத்திலை படிச்சவனிலை இருந்து படியா தவன் வரை அப்பிடித்தானை செய்யிறுங்கள். அதுகும் இந்தச் சிணி யன் பூலோகன், — அவற்றை குருகுருப்பெல்லாம் தீர்ந்த பிறகு சீத ணத்தை வாங்கிக் கொண்டாடி எண்டு அவளைப் போட்டு திருகி எடுக்கிறுன். சீ, தூமைச் சீலையெடுக்கிற கட்டாடிக்குக்கூட உந் தப் புத்தி வராது.

பாவம், அவள் பெடிச்சி பூரணம்! இந்த எளியவனை நம்பி வந்ததாலை நிண்ட இடமும் இல்லாமல் வந்த இடமுமில்லாமல் கடற்கரை தாளங்காயாக அங்கோ இங்கோ என்று கிடந்து ஆத் தலையிருள்.

"என்னடி நான் சொன்னது காதிலை விழுந்துதோ? உன்ரை கொக்காளவைக்குக் குடுத்த மாதிரி நீயும் போய் உன்ரை சீதனத் தையும் வாங்கிக் கொண்டு வா. இல்லையெண்டால் இஞ்சை என் னோடை இருக்கவும் கூடாது. என்ரை முகத்திலை முழிக்கவும் கூடாது. தெரிஞ்சுதே?"

"போக்கணம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன் என்று ஏதோ சொல்லுங்கள். நீ அந்த ரகத்தைச் சேர்ந்தனிதான். என்ரை அக்காவைக்கு பேசிச் செய்த மாப்பிள்ளைகளின் பெறுமதி தெரியுமோ? அதுகளின்ரை கால் தூசிக்குக் கூட பெறுமதி இல்லாத உனக்குமொரு சீதணமோ? உன்னோடை எனியுமொரு வாழ்க் கையோ எனக்கு. என்னை நீ விட்டு வாங்கிச் சீவிக்கக்கூட தயங்க மாட்டாய். சீ, வெட்கம் கெட்டவனே! இந்த உயிர், எனக்கொரு மயிருக்கு சமானம். ஒரு முழக் கயிறு சொன்னது கேட்கும் நான் மானத்தோடு போய்ச்சேர."

"எட பாழ்படுவானே! அவளை உந்த முடிவுக்காடா கடைசி யிலை கொண்டு வந்து விட்டிருக்கிறாய்? உன்ரை தலையிலை இடியேறு தான்ரா விழப் போகுது.

-சிச்ச கூலத்திரி

நான் ...
யாக இருந்தால் ந...
னோடை நீ ...ரிநாசமத்துப ...

# "நிகோடின்"

"நிகோடின்" என்றதும் புகையிலையில் உள்ள விஷம் என்பது பலருக்குத் தெரியும். ஆனால் அது ஒரு தனிமனிதனின் பெயர் என் பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். நிகோடின் என்பவர் போர்த்துக்கல் நாட்டில் பிரான்ஸ் நாட்டின் தூதுவராக இருந்தார். அப்போது புகையிலையைப் பரப்புவதில் பெரும் பங்கு எடுத்தார். அத னால் புகையிலையின் விஷத்துக்கும் அவர் பெயரை வைத்துவிட்டார்கள்.

- அரஸ்




# பனம்விதையும் பனம்பழமும்

பல மாத கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் கற்பகனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஒவ்வொரு கற்பகம் இதழிலும் பனைபற்றி உங்களோடு பல்வேறு அம்சங்கள்பற்றி அளவளாவிக் கருத்துக்களைப் பரிமாறி வந்துள்ளேன். கற்பகம் போலியும் பனையின் பெருமையில் அப்போதெல்லாம் நாம் திளைத்திருந்தோம்.

ஆனால் கடந்துபோன காலங்கள் எமது பனைக்குக் காலனான தூர்ப்பாக்கியம் எமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது அல்ல பல்லாயிரம் மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டி, அக்குடும்பங்களின் சுபீட்ச வாழ்விற்கு அரணாக விளங்கும் பனைமரங்கள் வீதிக்கு வீதி காவல் அரண்களாகச் சாய்ந்து கிடக்கும் பரிதாப நிலையை, பனை மரங்களை வெட்டி வீழ்த்தும் கொடூரத்தனத்தை எப்படித்தான் எம்மால் கண்டு மனம் பதைக்காமல் இருக்க முடியும்?

எமது பிரதேசத்தின் முக்கிய பொருளாதார மூலவளமான பனை வேரோடு சாய்க்கப்பட்டு வருவது எமது பொருளாதாரத்தின் மூலவேரையே அடியோடு அழிப்பது போன்றதாகும்.

இத்தனை இழப்புகளுக்கும் மத்தியில் பனை தலைநிமிர்ந்து நிற்கின்றது. ஏனெனில் எமது பனை 'தெய்வப் பனை' அல்லவா!

இழக்கப்படும் ஒவ்வொரு பனைக்கும் ஈடுகட்டும் முகமாகத் தமிழ் ஈழத்திலும், பனை வளரும் மாவட்டங்களில் பனம் விதை நடுகை இயக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. ''நாட்டுக்காக உயிர்நீத்த உத்தமர்கள் நினைவாக வீட்டுக்கு ஒரு பனம் விதை நாட்டுவோம்''- என்ற புதிய சுலோகமும் பிறந்

துள்ளது. இவ்வேளையில் முற்றிலும் பொருத்தமானதே!

மக்கள் ஸ்தாபனங்களும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பனம்விதை நடுகை இயக்கத்தில் பங்குகொள்ளுவது வரவேற்கத்தக்கது. குறிப்பாகப் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு லட்சம் பனம் விதை நாட்டும் இயக்கத்தை மேற்கொண்டு நிதி ஒதுக்கிக் களத்தில் இறங்கியுள்ளது முன்மாதிரியானதும், பாராட்டிற்குரியதுமாகும். இச்சாதனைக்சாகப் பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கி. இராசநாயகத்திற்குக் கற்பகனின் "சபாஷ்".

இம் முன்மாதிரியைச் சகல பகுதிகளின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பின்பற்ற முன்வர வேண்டும்.

❀ ❀

யாழ்ப்பாணத்துப் பனம் பழம் ஜேர்மனிக்கு விமானத்தில் பறந்து சென்றுள்ளது. இப்பத்திரிகைச் செய்தி எம்மை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. பனம் பழச்சுவையை ஜேர்மனியரும் சுவைத்து இன்புறப் போகின்றனர்.

தமிழ் ஈழப் பிரதேசத்திலும், விசேடமாக யாழ் குடாநாட்டிலும், வருடா வருடம் வீணாகிப் போகும் பனம் பழச் சாறுகளைப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றைப் பனை அபிவிருத்திச் சபை ஜேர்மனி நாட்டின் உதவியைக் கொண்டு வகுத்துள்ளது. ஒரு பனம்பழத்தில் குறைந்தது இருநூறு கிராம் பழச்சாறு உள்ளதாகவும், வீணாகும் பனம்பழங்களில் பத்தில் ஒரு பகுதி பாவிக்கப்பட்டாலும், 2000 தொன் பழச்சாறு கிடைக்கும் என்றும், இவை நவீன முறையில் சிறந்த 'ரெற்றோபாக்' முறையில் ஏற்றுமதிக்கும், உள்நாட்டுப் பாவனைக்குமுரிய குளிர் பானமாக மாற்றப்படும் என்றும் ஜேர்மன் அரசாங்கம் இதற்கான நிதியை வழங்க முன்வந்துள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மூன்று விஞ்ஞானிகளும், ஜேர்மனியின் இலங்கைத் தூதுவரான திரு. பிளவ் அவர்களும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

ஜேர்மன் தூதுவருக்கும், விஞ்ஞானிகளுக்கும் பனம் பழச் சாற்றில் தயாரிக்கப்பட்ட பானங்கள் பரிமாறப்பட்டன. இப் பானங்களைச் சுவைத்து மகிழ்ந்த ஜேர்மன் தூதுக்குழு தம்முடன் சில பனம் பழங்களையும் விமானம் மூலம் தமது நாட்டிற்குக் கொண்டு சென்றுவிட்டனர்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்லிபுரக் கோவில் பகுதியில் பனம் பழத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று ஜேர்மனியின் உதவியுடன் நிறுவப்படவுள்ளதாகக் 'கற்பக'னுக்குச் செய்தி கிடைத்துள்ளது.

இத்தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் பனங்காய் தேங்காயின் விலையை எட்டிப் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வேளையில் அரியாலையூர்க் கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களின் பாடல் ஒன்று நினைவுக்கு வருகின்றது: —

"மூலப் பொருளாய் முன்னின்ற
நற்பனையே
ஞாலப் புகழமையிலும்
நானென்றே—கோலஞ்செய்
கற்பகமாய் வாய்ந்தேகனிகின்றாய்
காசினிக் கண்
அற்புதமாய் வாழ்க அருள்."

செம்பியன் செல்வன்

எழுதும்

# இந்திரஜித்

● தொடர் நாடகம்

***************

[பாற்கடல். ஆதிசேடனின் இளவெம்மைச் சூட்டின் படுக்கையிலே அறிதுயிலில் யோகம் பயின்றுகொண்டிருக்கிறார் விஷ்ணு. லக்ஷ்மியின் மந்தகாச முகமலர்ச்சி எங்கும் - எதனையும் லக்ஷ்மீகரமாக்கிக்கொண்டிருக்கிறது. எங்கும் ஆனந்தம்; பேரானந்தம்.

திடீரென, அந்த நித்திய மோனலயத்தைக் கிழித்துக்கொண்டு ..''வைகுந்தவாசா... அநாதை ரக்ஷகா... ஆபத்பாந்தவா .. அபயம்! லக்ஷ்மி நாராயணா... அபயம்... அபயம்'' என்ற குரலொலி எழுப்பிக்கொண்டு தேவர்கள்...ரிஷிகள் . . . தேவகன்னிகைகள் . . . முனிபுங்கவர்கள் . . . வருகிறார்கள்.

திருமாலின் கண்மடல்கள் போதாகி மலருகின்றன.]

திருமால் : (யோகநிலை நீங்கி) யார்...? யார் அபயக்குரல் எழுப்புவது? அபயக்குரல் எழுப்ப நேர்ந்த அபாயம் என்ன?...( கூட்டத்தினரை அப்போதுதான் காண்பவர் போல்) யாரது?... தேவரிஷிகளா?... வரவேண்டும்... வரவேண்டும்... இந்த அதிகாலை வேளையிலே... மலரினம்கூட கண்விழிக்காத புலரிப் பொழுதிலே நம்மை நாடி வந்த காரணம் என்ன?

ரிஷி: நாராயணா... வேண்டாம் உன் மாய லீலை ...நீங்கள் அறியாததொன்றா இந்த ஏழுலகிலும்...? பிரபோ ... நாம் மிக

நொந்துபோய் வந்திருக்கிறோம்... எங்களை மேலும் மேலும் சோதனை செய்யாதீர்கள்...

**திருமால் :** (சிரித்து) அட . . டடா! ரிஷிகளே ... ஏன் இந்தச் சீற்றம்? நானோ நித்தம் துயில் கொள்பவன்... துயில்வண்ணனுக்குத் தெரியுமா உங்கள் துயரத்தின் காரணம்? உண்மையைச் சொன்னால் கோபித்துக் கொள்கிறீர்கள் . . ம் . . எனக்கு இப்படியும் ஒரு கெட்ட பெயர்?...

**முனிவர் :** பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரமனே! நீரா ஒன்றும் அறியாதவர்...? நீரா நித்தமும் நித்திரையிலாழ்ந்திருப்பவர்...? இல்லை . . இல்லை . . நீர்தான் எங்களையெல்லாம் அறியாமை என்னும் துயிலிலாழவைத்து வேடிக்கை பார்ப்பவர் .. நீர் வேடிக்கைப்பிரியர் ... உல்லாசப் பிரியர் உல்லாசவாசர் .. மூவுலகை ஈரடியால் அளந்த பெருமாளே...நீயே எங்களுக்குத் தஞ்சம் . . விமோசனம் . . அடைக்கலம் எல்லாம் . எங்களைக் காப்பாற்றும்...எங்கள் தர்மத்தைக் காப்பாற்றும்...

**தேவகன்னிகை:** உல்லாசவாசா! இது என்ன நீதி? உனக்கு மட்டும் தான் உல்லாசமா? . . எங்கள் மகிழ்ச்சியை எங்களுக்கு மீட்டுக் கொடுங்கள் . .

**திருமால் :** (வியப்புடன் நோக்கி) யார் பேசுவது? தேவ கன்னிகைகளா? உங்களுக்குத் துன்பமா? . . இது என்ன ஆச்சரியம் . . தேவேந்திரன் பாதுகாப்பில் நித்தம் நித்திய அமுதமுண்டு...கற்பகதரு நீழலிலே...சிந்தாமணி ஒளியினிலே ஆடிப்பாடி . . களைப்பகல காமதேனுவின் பாலருந்தி உண்டுமகிழும் உங்களுக்கா துயரம்? அப்படியானால் அது தேவலோகத்தின் பெருமைக்கல்லவா இழுக்கு...!

**முனிவர் :** நாராயணா! . . உனக்கு இன்னுமா விளையாட்டு . .? எங்கள் துன்பங்கள் எல்லாம் உனக்கு விளையாட்டாகவா இருக்கிறது ? அப்படியானால் நன்றாக ரசி...இன்னும் எங்களைத் துயர சாகரத்தின் நரகச் சுழிகளில் இட்டுச் சித்திரவதைப் படுத்து...

**திருமால் :** (மேலும் மந்தஹாசச் சிரிப்புடன்) அடேயப்பா...என்ன சீற்றம் . . ஆத்திரம் . .! வந்த நோக்கத்தைச் சொல்லாமல் என்மீது சீற்ற அம்புகளை எய்துகொண்டிருந்தால் எப்படி . ? (திருமகள் பக்கம் திரும்பி) லக்ஷ்மி...எனக்குத்தான் புரியாமல் ரிஷிகளின் சாபத்துக்கு ஆளாகி விடுவேனோ என்று அச்சமாக

இருக்கிறது...உனக்கு ஏதாவது புரிகிறதா ...? புரிந்தால் விளக்க மாகச் சொல்லி என்னைக் காப்பாற்று . . என்னை அவ்வப்போது காப்பாற்றத்தானே நீ கால்மாட்டிலிருந்து என்னை கண்ணய ராமல் பார்த்து வருகிறாய்?

[ஸ்ரீதேவி அர்த்தமான புன்னகை புரிகிறாள்]

முனிவர் : தாயே . . லக்ஷ்மி.. உன் கருணையின் பெருமையால் நாரா யணனுக்கு முன்பாகவே நாமம் தரித்து லக்ஷ்மி நாராயணன் என்று துணைவன் பெயர் கூற வைப்பவளே . . உலகின் துன் பங்களைத் துடைத்து அருள் மழை பொழியும் உன் கருணை விழிகள் கூடவா மூடிக் கொண்டன?

திருமால் : (பதறுவது போல் பாசாங்கு செய்து) முனிவர்களே... தேவர்களே . . வேண்டாம் . . வேண்டாம் . . நீங்கள் தேவி யிடம் முறையீடு செய்து விடாதீர்கள் . . பின் என்பாடுதான் திண்டாட்டமாகிவிடும் . . சிவனே! என்று நிம்மதியாக நித்தி ரையில் ஆழ்ந்திருக்கும் - 'சும்மா இருக்கும் சுகம்' இல்லாமல் போய்விடும்.

தேவகன்னிகை : மாதவா . . . மாயவா . . . போதும் உன் லீலா விநோதங்கள் . . இனியும் எங்களால் உன் விளையாட்டுப் பொம் மைகளாக இருக்கமுடியாது . . . ஏனென்றால் உன் விளையாட் டுப் பொம்மைகளின் மானம் என்கின்ற ஆடைகள் அகன்றி ருப்பதைப் பார். உன் விளையாட்டை நிறுத்தி . . . பொம்மை களையும் பார் . . .

திருமால் : (மந்தஹாசத்துடன்) உங்கள் ஆவேசம் . . அல்லது இழப்பு உங்கள் கண்களைத்தான் மறைத்து விட்டது எனக் கரு துகிறேன் . . இன்னமும் நீங்கள் என்னைத் தேடி வந்த காரணத் தைச் சொல்லவில்லையே . . ? வைத்தீஸ்வரன் நோயைக் குணப் படுத்துவாராயினும், நோயின் தன்மையை நோயாளிதான் கூற வேண்டும் . . . இந்த உண்மை உங்களுக்குப் புரியவில்லையா? அல்லது எனக்குத்தான் புரியவில்லையா என்பதே புரியவில்லை . .

ரிஷி : வேத உட்பொருளின் அடி தேடிச் சென்று வந்த நாராயணா, உமக்கா நாம் வந்தது புரியவில்லை . ? அர்த்தத்தின் அர்த்தமாகி . . . அர்த்தமே நீயேயாகி நிற்கும் உனக்கு நாம் சொல்லியா புரியவைக்க வேண்டும்? வேண்டாம் இந்தச் சோதனை...நம்மால் தாங்கவே முடியாது...ஏனென்றால் நாம் வலியற்றவர்கள்.

திருமால் : (கேலியுடன், லக்ஷ்மி பக்கம் திரும்பி) பார்த்தாயா தேவி...மாதவத்தின் வலிமையால் மூவுலகைக்கட்டியாளும் சிவனையே அடிமை கொள்ளும் இவர்கள் வலியற்றவர்களாம். ஆனால் செய்வதறியாது . . சோம்பிக் கொண்டு உன் பார்வையில் படுத்தெழும்பும் எனக்கு எல்லாம் தெரியுமாம்.

லக்ஷ்மி : (புன்னகையுடன்) சுவாமி...எனக்கு உங்கள் குறும்புகள் புரியும். . தாங்கியும் கொள்வேன். . பாவம் உம் பாதகமலமே தஞ்சமென நெஞ்சம் கொண்டு...துயரத்தின் அலை மோதி வந்திருக்கும் அவர்களிடமேன் இந்தக் குறும்பு மொழிச் செங்கரும்புகள் ...? கரும்புகள்கூட கழியாகத்தான் அவர்களுக்கு இப்போது படும்... அவர்களிடம் இன்னுமா பாசாங்கு...?

திருமால் : சரி...சரி...இனி என்பாடு திண்டாட்டம்தான். தேவியின் கருணை கணவனை விட பக்தர்களிடம்தான் அதிகம்.

ரிஷி : (மகிழ்வொலியுடன்) மகாப்பிரபு! தாயின் கருணை தனயர்களிடம் இருப்பதில் வியப்பேது? தாயே தெய்வமாகப் பெற நாம் செய்த மாதவம்தான் என்னவோ?

திருமால் : (பொய்க்கோபத்துடன்) அப்படியானால்...நாயகன்... கணவன் வேண்டாமா?

லக்ஷ்மி : (திடுக்கிட்டு) பிரபு... இதென்ன விபரீத விளையாட்டு. வேடிக்கைப் பேச்சுகளுக்கும் அளவில்லையா?

திருமால் : (மனம் நிறைவுடன்) தேவி பயந்து விட்டாயா? குழந்தைகள் முன்னால் தாயைக் கிண்டல் செய்து மகிழ்வதில் கணவன் அடையும் இன்பம் இருக்கிறதே...அதற்கு ஈடிணையில்லை. . முனிபுங்கவர்களே. . ஏன் இந்தக் கலக்கம் . . கலவரம் . . கண்ணீர் . . கம்பலை . .?

ரிஷி : மாயவா. . . மதுசூதனா...தேவாதிதேவா...நாராயணா... எங்களால் இந்த அரக்கன் இலங்கேஸ்வரன் இராவணேஸ்வரனின் கொடுமையை. .அக்கிரமங்களைத் தாங்கவே முடியவில்லை. மூவுலகங்களில் எங்கு போய் ஒழிந்தாலும் அங்கு வந்து எம் நிஷ்டையைக் குலைக்கிறான் யாகத்தில் மண் அள்ளிப் போடுகிறான்... நெறிதவறும்படி நிர்ப்பந்திக்கிறான்...ரிஷி பத்தினிகளையும்...தேவமாதர்களையும் பலாத்காரமாகக் கெடுத்துச் சீரழிக்கிறான். எங்கள் மகிழ்ச்சி...சாந்தி...பிரேமை...சுந்தரம் அத்தனையும் அற்றுப்போய் விட்டன. எங்களின் சநாதன தர்மம் இவனால் சீர்குலைந்து வருகின்றது பிரபு .. அவனிடமிருந்து எங்களை இரட்சிக்க வேண்டும் மகாப்பிரபு...

திருமால் : முனி புங்கவர்களே...நீங்கள் எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்...யார் பற்றிப் பேசுகிறீர்களென்று தெரியுமா...?தென்னிலங்கை அதிபதி இலங்கேஸ்வரன்...இராவணேஸ்வரன் (சிரித்து) பெயரிலேயே ஈஸ்வரனைக் கொண்டிருப்பவன்... கலாவிற்பன்னன்... வீணைக் கொடியுடையோன் ... கைலாயமலையைக்கூட கானத்தால் கனியவைத்தவன் ... திக்கஜங்கள் எட்டும் பயந்தோடும் வீராதி வீரன்... தமிழ் மறவன் ... திராவிட குலத்தோன்... அவர்கள் விடும் மூச்செலாம் வீரத்தின் வெம்மை... பேசும் தமிழெலாம் கனியின் தண்மை...செய்யும் செயலெலாம் அறத்தின் செழுமை ... அந்த வழி வந்தவனல்லவா... அவனை வெற்றி கொள்வது என்பது சாமான்ய காரியமா?...

ரிஷி : திருமாலே, என்ன சொல்கிறீர்கள் ...? எங்கள் நெஞ்சப் பதைப்பை உணரமாட்டீர்களா...?

லக்ஷ்மி : பிரபோ...நீங்களா இப்படிப் பேசுவது?...துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் நீங்களா?

திருமால் ; லக்ஷ்மி, நீ என்ன ஒன்றும் அறியாதவளா?... இராவணேஸ்வரனைப் புரிந்து கொள்ளாதவளா?...அவனின் பராக்கிரமம் ஈரேழு உலகமும் நன்கறிந்து கொண்டதல்லவா? ஹரன்... ஹரி...பிரம்மா ஆகிய மூவரும் அவனிடம் வரம் வரமாகப் பலத்தை ... வீரத்தை .. விவேகத்தை ... ஞானத்தை அள்ளிக் கொடுத்துவிட்டல்லவா வந்திருக்கிறோம் ... ஒன்றைப் புரிந்து கொள் லக்ஷ்மி .. மண் ..பெண்...பொன் அனைத்துமே வீரனுக்குத்தான் சொத்தாக முடியும்...சொந்தமாக முடியும்...

லக்ஷ்மி; அதற்காக வீரம் தர்மத்துக்குத் தடைக்கல்லாக அமையலாமா? பிரபு இது ரிஷிகளுக்குச் சோதனை காலமல்ல...உங்களுக்கு...உங்கள் சத்தியத்துக்கு...நேர்மைக்கு...

தேவகன்னிகை : அப்படியானால் எங்களுக்கு விடிவே இல்லையா?... பரந்தாமா, உனது பக்தர்களை இப்படிக் கைவிட்டுவிடலாமா?

திருமால் : அவனும்தான் பெரிய பக்தனாச்சே...அவன் பக்தியை மெச்சித்தானே... நாங்களும் வரமளித்திருக்கிறோம்!

முனிவர் : அதனால்தான் நாங்களும் உங்களிடம் வரம் கேட்டு... இல்லையில்லை தர்மப்பிச்சை கேட்டு கையேந்தி வந்துள்ளோம். எல்லாமே அவனுக்கு நீங்களிட்ட பிச்சைதானே...அவன் வாழ்வும், வளமும். அவனின் அக்கிரமங்களிலிருந்து எங்களை மீட்க முடியாதா...தயை செய்யுங்கள் மகாப்பிரபோ!

**திருமால் :** எல்லாம் கற்றுணர்ந்த மெஞ்ஞானிகளே இப்படிப் பேச லாமா? கைவிட்டுச் செய்த தருமம்...அம்பறாத்தூணியிலிருந்து எடுத்த அம்பு எதுவுமே எங்களுக்குச் சொந்தமில்லை...எல்லா வற்றிற்கும் மேலாக அவனின் சாம வேதகானத்தைக் கேட்ட சிவபெருமானும் அவனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து விட் டார். இவை எல்லாவற்றிற்கும் காரணனான சிவனைப் போய்க் காணுங்கள்...

**முனிவர் :** அவர்தான் எங்களை உங்களிடம் அனுப்பிவைத்தவர்...

**திருமால் :** (சிரித்து) அடடா!...அவரும் தனது திருவிளையாடலைத் தொடங்கி விட்டாரா?...அவருக்கு மானுடத்துக்கும் மகத் தான தெய்வீகத்துக்குமிடையில் மாறாத போராட்டத்தை ஏற்ப டுத்தி, மானுடத்தை உய்விக்கச் செய்வதில்தான் எத்தனை ஆசை.

**லக்ஷ்மி :** (இடைமறித்து) உங்கள் மாயலீலைகள் அவற்றிற்கொன் றும் குறைவானதில்லையே – மாயலீலைகளும் திருவிளையாடல்களும் மானுடத்தை உய்விக்க வந்த செந்நெறிச் செயல்களல்லவா?

**முனிவர் :** அநாதை ரக்ஷகா!...ஆபத்பாந்தவா!...லக்ஷ்மி நாரா யணா...தேவி கொலுவிருக்கும் காருண்ணிய மார்பா.. உன் பேச் சுக்களைக் குறைத்து எங்களை காப்பாற்ற ஓடிவா!...

**திருமால் :** தேவாதி தேவர்களே...ரிஷி முனிவர்களே. தேவகன்னி யர்களே...நீங்கள் நினைப்பதுபோல் அவன் வெறும் அக்கிரமக் காரனாக இருந்தால்..என்றோ அவன் ஆட்சியும் மமதையும் அடக்கப்பட்டிருக்கும்...ஆனால் அவன் ஒப்பற்ற கலைஞன்...கலை ஞனுக்குள்ள அழகுரசனையின் வேட்கை என்கின்ற பலவீனம் அவனது வீரம் என்கின்ற செயல்களின் பின்னால் மறைந்திருப் பது உங்கட்கு அவனை வெறும் அக்கிரமக்காரனாகக் காட்டு கிறது. ஆனால் அவன் ஒப்பற்ற மானுடன் அதிமானுடன்.... இதனைப்புரியாதோர் அவனை அரக்கன் என்றும் வையலாம்... மானுடத்தின் பலமும் பலவீனமும் கொண்ட ஒப்பற்ற பிரதி நிதி...நன்மையும் தீமையும்...இருளும் ..ஒளியும்...பாவமும் புண் ணியமும் ..கலையும் காமமும்...காதலும் கற்பும்...வீரமும் விவே கமும்...எல்லாவற்றின் ஒப்பற்ற கலவைதான் மானுடம். ஒன் றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தெடுக்க முதலில் மானுடன் முயல்கிறான். . . முடியாதபோது அங்கு தெய்வம் தரிசனமா கும் . . . தீமைகள் பொசுங்கும்...நன்மைகள் தளிர்க்கும் . . . ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு. காலம் கனியும் வரை காத்திருத்தல் அவசியம். வாழ்வின் தத்துவமே அது தான்—காத்திருத்தல்.

**தேவகன்னிகை :** (கலங்கி) தேவா! . . இன்னும் எவ்வளவு காலம் தான் காத்திருக்க வேண்டும். . .?

**திருமால் :** கன்னிகையே கலங்காதே! இராவணேஸ்வரனிடமிருந்து உங்கட்கு காப்பு வழங்கும் காலம் நெருங்கிவிட்டது. அவனின் பெருமை உலகெங்கும் பரவும் நாள் வந்துவிட்டது. .

**எல்லோரும் :** (ஏகோபித்த குரலில்) ஹே! நாராயணா. . ஆபத்பாந்தவா...உன் பெருமையே பெருமை...நீ எங்கட்கு அருள்புரிந்து விட்டாய்...

[எல்லாரும் போகிறார்கள்]

**திருமால் :** லக்ஷ்மி...ஏன் இப்படிப் பார்க்கிறாய்? .

**லக்ஷ்மி :** இல்லைப்பிரபு...உங்களின் லீலைகளின் மகத்துவத்தை எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்...ஞான வெளியின் ஈசான்ய மூலையில் போய் முட்டிக்கொண்ட மயக்கம் தவிர வேறொன்றும் நடந்தபாடில்லை...புரிந்த பாடில்லை. அபயம் என்று குரல் கொடுத்து வந்தார்கள் . . வேடிக்கையாகப் பேசுவதுபோல்... அவர்களை அழவைத்து மானிடத்தின் மகத்துவத்தை...பிறவியின் பயனை எடுத்துரைத்தீர்கள்...முடிவில் பக்தர்களின் பக்கமும் சேர்ந்து அடைக்கலமும் கொடுத்துவிட்டீர்கள்...

**திருமால் :** இராவணன் பக்தன் இல்லை என்று எண்ணிவிட்டாயா? அவனைப்போன்ற சிவபக்தனை இந்த மூவுலகெங்கு தேடினும் கிட்டாரே! இப்பொழுது...இன்று முதல் ஒரு தத்துவப் போராட்டமே எழப்போகிறது...

**லக்ஷ்மி :** எப்படிப் பிரபு?

**திருமால்:** எப்படியா?... அவனோ சிவனை வணங்கும் வீரசைவன்... நானோ நாராயணன்... ஹரிஹரன் என்ற பெயர் எனக்கு இருக்க இது சோதனையில்லையா?... எங்கள் போராட்டத்தின் உள்ளுயிரை எத்தனை பேர் புரிந்து கொள்வார்கள்?...

**லக்ஷ்மி :** அப்படியானால் என்னதான் செய்யப் போகிறீர்கள்?

**திருமால் :** அவனை ஆட்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது தேவி.

**லக்ஷ்மி :** எப்படி?...நீங்களும் சிவனுமாகச் சேர்ந்து அவனுக்கு வரத்திற்குமேல் வரமாக அருளியிருக்கிறீர்களே? அவனை எப்படி மாயையினின்றும் அழித்து ஆட்கொள்ளப் போகிறீர்கள்?

திருமால் : தேவி...நீ என்ன ஒன்றும் அறியாதவளா...அல்லது புரியாதவளா?...

லக்ஷ்மி : (வியப்புடன்) பிரபு...என்ன சொல்கிறீர்கள்?

திருமால் : (சிரித்து) நிச்சயமாக நீயும் மானிடர்களில் ஒருத்தியாகவே மாறிவிட்டாயா?... மனித குலத்திடையே இரக்கமும் அருளுமாக நீ நெருங்கி நெருங்கி நீயும் மானுடமாகிவிட்டாயா?

லக்ஷமி : (மகிழ்ந்து) இதிலொன்றும் தாங்களும் குறைந்தவர்களில்லையே...? அவதாரம் அவதாரம் என்று தெய்வ நிலையிலிருந்து கீழிறங்கி வருவது தங்கள் வரலாற்றின் புகழ்மிக்க ஏடுகளாயிற்றே...

திருமால் : தேவி... நீயும் காலப் போக்கில் கடந்தவை யாவற்றையும் புதைத்து விட்டாயா...? பிரம்மாவின் முதல் சிருஷ்டிகளான சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனத்சுஜாதர் எம்மை வழிபட வைகுந்தம் வந்தபோது, எம் துவாரபாலகர்களான ஜயன், விஜயன் அவர்களை வழிமறிக்க அவர்கள் சீற்றம் கொண்டு 'காமக்குரோதம் நிறைந்த பூலோகத்தில் பிறந்து ஆசாபாசங்களுடன் உழலக்கடவீர்!' எனச் சாபமிட்டதை நீ மறந்தா போனாய்?

லக்ஷ்மி : அதற்குத்தான் நீங்கள் அவர்கள் மூன்று ஜன்மங்களில் அப்படி உழன்று விட்டு மீண்டும் வைகுந்தம்வர வரமளித்தீர்களே...

திருமால் : அதன்படி அவர்கள் முதன் ஜன்மமாக ஹிரண்யன்—ஹிரண்யாட்சன் எனப் பிறப்பெடுக்க, நான் வராக, நரசிம்மாவதாரம் எடுத்து அவர்களின் ஒரு பிறப்பை நீக்கினேன். மிகுதி இரண்டு...

லக்ஷ்மி : அப்படியானால்...?

திருமால் : ஆமாம் தேவி...ஜயன், விஜயன் ஆகியோர்தான் இவர்கள் குறிப்பிடும் இராவணேஸ்வரனும் கும்பகர்ணனும். அதற்கு ஒரு அவதாரம் தான் எடுக்க வேண்டும்.

லக்ஷ்மி : (திடுக்கிட்டு) என்ன மீண்டும் அவதாரமா? உங்களுக்கு பக்தர்களுக்காக கீழிறங்கும் சபலம் இன்னுமா போகவில்லை? அது எப்படிப் போகும்? உங்கள் உள்ளத்தோடு பிறந்த குண

மாச்சே!... போகட்டும். அவதார விளையாட்டில் நானிருக்கிறேனு இல்லையா என்பதைப் பொறுத்துத்தான் உங்களுக்கு அனுமதி :

**திருமால் :** (மகிழ்வுடன் சிரித்து) தேவி நீ வேறு நான் வேறல்ல .. பெண்களில்லாமல் ஆண் எதனையும் எப்போதும் சாதித்ததில்லை. ஒரு ஆடவனின் வெற்றியின் பின்னுல் எப்பொழுதும் ஒரு பெண் ஒழிந்து கொண்டிருக்கிருள்... சிவனிடம் சக்தி இருக்கிருள். அவர் அர்த்தநாரீஸ்வரராகிருர். சக்தி இல்லாவிட்டால் சிவம் ஜடம் தான். இந்த லக்ஷ்மி இல்லாவிட்டாலோ இந்த நாராயணனை தரித்திர நாராயணன் என்றுதான் அழைப்பார்கள்.

**லக்ஷ்மி :** (மகிழ்ந்து) போதுமே இந்தப் புகழ்ச்சி. புகழ்ந்து புகழ்ந்தே நீங்கள் பெண்களை அடிமை கொண்டு விடுவீர்கள்... ஆமாம் உங்கள் அவதாரம் பற்றிக் கூறுங்கள்... பிரபு...

**திருமால் :** தேவி எனது இந்த அவதாரம் உலகம் .. உலக மக்கள் உய்ய ஏற்றதொன்ருக, பல வாழ்க்கை நெறிகளை விளக்குவதாக அமையப் போகிறது. இந்த அவதாரம் கூறும் கருத்துக்கள் காவியமாக உலகெங்கும் பரவப்போகிறது... வேதமாகவும் நிலவப் போகிறது .. இந்த அவதாரத்திலும் என் நாயகி நீதான்... நான் பள்ளிகொள்ளும் ஆதிசேஷடன், சக்ராயுதம், வெண்சங்கு எல்லாருக்குமே இடமுண்டு.

**லக்ஷ்மி :** நாராயணு! நாங்கள் அனைவரும் பாக்கியசாலிகள்! இந்த அவதாரத்திற்கு என்ன நாமம் சூட்ட எண்ணியிருக்கிறீர்கள்? விவரமாகக் கூறுங்கள் ...

**திருமால் :** தேவி... நான் அயோத்தி மாநகரில் தசரதச் சக்கரவர்த்தியின் பட்டமகிஷியின் வயிற்றில் புத்திரனுக இராமன் என்ற நாமத்துடன் அவதாரம் கொள்ள ஆதிஷேடன், சக்கராயுதம், சங்கு என் உடன் பிறப்புகளாக லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் எனத் தொடருவர்...

**லக்ஷ்மி :** நான் ...?

**திருமால் :** நீ மிதிலையில் ஜனகனின் புத்திரியாக வளர்வாய்.

**லக்ஷ்மி :** நான் யார் வயிற்றில் பிறப்பெடுப்பேன்?

**திருமால் :** தேவி... நீ புனிதமானவள் ...கற்பின் செல்வி... நீ மண்ணின் மகளாக ஜனகனுக்கு கிட்டுவாய்... இந்த அவதாரத்தில் நான் ஏகபத்தினி விரதனுக வருவேன்... இதனை வால்மீகி காவியமாகப் பாடி உலகம் உள்ளளவும் நிலைக்கச் செய்வார். இதனுல் புகழ் பெறப்போகிறவள் நீதான்... தேவி...

— திரை —

# சங்கச் செய்திகள்

## இரண்டாந்தடவைப் பணம் வழங்கப்பட்டது

சங்கானை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர்களுக்கு இரண்டாந்தடவைக் கொடுப்பனவாக ரூபா 54,554.00 வழங்கி உள்ளது.

இக் கொடுப்பனவு மேற்படி சங்க அங்கத்தவர்களால் 16-07-88 தொடக்கம் 21-10-88 வரையிலான மூன்று மாத கால இடைவெளியில் வழங்கிய 109108 போத்தல் கள்ளுக்கே இந்த (மேலதிகமான இலாபப் பணம்) இரண்டாந்தடவைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் திரு . பு . நடேசு அவர்கள் கற்பகத்திடம் தெரிவித்தார்.

இதில் ஆகக் கூடுதலான இரண்டாந் தடவைப் பணத்தைப் பெற்று முதலாம் இடத்தை வகிப்பவர் திரு.மு.நாகேஸ்வரன். இவர் பெற்ற இலாபப் பணம் ரூபா 1707.50 ஆகும். இவர் மேற்படி சங்க இயக்குனர் சபை உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 50-ம் இலக்கத் தவறணையைச் சேர்ந்த திரு. மு. இராசேந்திரம் ரூபா 1568.50 பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். அதே இலக்கத் தவறணையைச் சேர்ந்த திரு.வ.பாலசிங்கம் ரூபா.1439.50 மூன்றும் இடத்தையும் பெற்று சங்க வரலாற்றில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளதாகவும் சங்கத் தலைவர் பெருமையுடன் தெரிவித்தார்.

## புதிய கற்பகம் விற்பனை நிலையம்

துணுக்காய் தெ.ப.பொ.கூ.சங்கம் இன்னொரு புதிய கற்பகம் விற்பனை நிலையத்தை ஆரம்பித்துள்ளதாக சங்க உத்தியோகத்தர் ஒருவர் கற்பகத்திடம் தெரிவித்தார்.

இதற்கென புதிய கட்டடம் ஒன்றை துணுக்காயில் நிர்மாணித்து அதன் திறப்பு விழா 18-10-88 ல் நடைபெற்றது.

இக்கற்பக விற்பனை நிலையத்தின் நோக்கம் பற்றி சங்க உத்தியோகத்தர் குறிப்பிடுகையில், கடன் அடிப்படையில் அங்கத்தவர்களுக்கு தேவையான நுகர் பொருட்களையும், மற்றும் பொருட்களையும் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிப்பதாகவும் ஏற்கெனவே இவ்வாறான ஓர் சங்கம் பாண்டியன்குளத்திலும் இயங்கி வருவதாகவும், இந்த நியாய விலை கற்பகம் விற்பனை நிலையங்களில் அங்கத்தவர்களும், பாவனையாளர்களும் வைத்துள்ள நம்பிக்கையின் பொருட்டே புதிதாக துணுக்காயிலும் புதிய கற்பகம் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

---

# "சாண்ட்விச்"

"சாண்ட்விச்" என ஒரு வகை உணவுண்டு. "சாண்ட்விச்" என்ற ஒரு பிரபுவுக்குச் சீட்டாடிக் கொண்டிருக்கும் போது உடனுக்குடன் கிடைக்குமாறு ஓர் உணவு தேவைப்பட்டது. அந்தப் பிரபுவின் பெயரே உணவுக்கும் பெயராக வந்தது.

*————*

# "டுபாக்கோ"

புகையிலையை ஆங்கிலத்தில் "டுபாக்கோ" என்கிறார்கள். வட அமெரிக்காவில் வாழ்ந்த பழங்குடிமக்கள் புகை பிடிக்க ஒரு வகைக் குழாயைப் பயன்படுத்தி வந்தார்கள். அக்குழாயின் பெயரைப் பிற்காலத்தில் புகையிலைக்கும் வைத்துவிட்டார்கள்.

— அரியாலை அரஸ்

# பஞ்சமர் பாட்டு

● புவனம்

மாநிலத்தைப் படைத்தவனே பிரம்மதேவனே - முழு
மானுடத்தைப் படைத்தவனே பிரம்மதேவனே
வர்ணமுறை வகுத்ததுமேன் பிரம்மதேவனே - அதில்
தர்மமென்ன நியாயமென்ன பிரம்மதேவனே!

பார்ப்பனர் நின் சிரசினின்று பிறந்தவர் என்றார் - உன்
தோள்களிலே போர்த்தொழிலோர் தொடங்கினரென்றார்
தொடையினின்று வைசியர்கள் தோன்றினரென்றார் - உன்
அடிகளிலே அவதரித்தோர் சூத்திரரென்றார்.
எங்களையும் பஞ்சமராய்ப் படைத்ததுமென்னே - நாம்
எங்கிருந்து வந்தவர் சொல் பிரம்மதேவனே!
பகுத்தறிவில் புலனறிவில் வேற்றுமையுண்டோ - நமை
வகுத்தவரார் இழிசனராய்ப் பிரம்மதேவனே!

அந்நியர்முன் அனைவருமே உரிமை இழந்தோம் - நாம்
ஆண்டுபல ஆயிரமாய் அடிமையிருந்தோம்.
அந்நியரின் ஆட்சிமுறை அழிந்தது என்றார் - தாம்
மீண்டும்எமை அடிமைகொளச் சூதுகள் செய்தார்.
சாலை வயல் கிணறுகுளம் நாங்கள் அமைத்தோம் - நாம்
போகவர நீர்பருகத் தடைகள் விதித்தார்.
ஆலயத்தில் நாங்கள் தொழ உரிமைமறுத்தார் - அது
ஆகமத்தில் உள்ளதென்று கதைகள் படித்தார்.

வினையெனவும் விதியெனவும் விளக்கமுனைந்தார் - தாம்
மனமிளகித் தருகிறதே உரிமைகளென்றார்.
இறந்தெவரும் விடுதலையை அடைந்ததுமுண்டோ - மனம்
இரங்கியதால் சமத்துவத்தை வழங்கியதுண்டோ?
இனிஇழக்க எதுவுமில்லை என்பதறிந்தோம் - நம்
தலையெழுத்தை மாற்றமனத் துணிவை அடைந்தோம்
அனைவருமே ஒருகுலமாய் ஒரு இனமாக - நவ
உலகமைக்க நாமெழுந்தோம் பிரம்மதேவனே.

நன்றி: தாயகம்

# வெளிவந்துவிட்டது !

# வாங்கிவிட்டீர்களா !

# அஷ்டலக்ஷ்மி

தினத்தாள் வாரத்தாள்

## கலண்டர்

தினமும்

- எமகண்டம்
- ராகுகாலம்
- சுபநேரம்

அறியமுடியும்

**ரூபா 1000/- பரிசுப்போட்டியும் உண்டு!**

தினத்தாள் கலண்டர் ஸ்பெசல் ரூபா 32/-

வாரத்தாள் கலண்டர் ரூ. 19/50 சதம்

எங்கும் கிடைக்கும் !

*தயாரிப்பாளர் :*

# சிவா பிறின்டேர்ஸ்

த. பெ. 1 — கைதடி.

தொடர் நவீனம்

# உண்மையில்லாத உறவுகள்

அத்தியாயம் → 5

கே. வி. நடராஜன்

இராணியின் கணவன் தில்லை நாதனின் நண்பர் சிவப்பிரகாசத்திற்கு வீடு பார்த்தவுடனேயே பிடித்து விட்டது. பட்டணத்திலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள அவருடைய சொந்தக்கிராமத்தில் ஏராளமான காணி பூமி எல்லாம் வசதியாக இருந்த போதிலும், பிள்ளைகளின் படிப்பை உத்தேசித்து யாழ்ப்பாணத்திலே குடியிருக்க விரும்பினார். கொழும்புக் கச்சேரியிலிருந்து இப்போதுதான் இங்கே மாற்றலாகி வந்திருக்கிறார். கொள்ளை சம்பளம். அந்தச் சம்பளத்தில்தான் சரிக்கட்டிச் சீவிக்க வேண்டுமென்பதில்லை வயலிலிருந்து வரும் நெல்லை வருஷம் பூராவும் சாப்பிட்டு அடுத்த போகத்திற்குரிய விதை நெல்லையும் கோர்காலியில் கட்டி வைத்த பின்பும் மிச்சம் வந்து விற்பதுண்டு. வெங்காயம், மிளகாய், வாழைத் தோட்டங்கள் வேறு. ஆனால் கஞ்சன். இந்த வீட்டுக்கும், வளவுக்கும் இருநூறு ரூபாய் கூட வாடகையாகக் கொடுக்கலாம். வளவின் வருவாயைக் கொண்டே மாத வாடகையைக் கட்டிவிடலாம். சிறாப்பரையும், ரீச்சரையும் நூற்று ஐம்பது ரூபாய்க்கு சம்மதிக்க வைத்து விட்டார்.

சிவப்பிரகாசத்திற்கு வீடு பிடித்து விட்டதுப், வளவைச் சுற்றிப் பார்த்து வர விருப்பங் கொண்டார். அதற்கு சேனபதி துணை சென்றான்.

வீட்டுக்குப் புதிய மனிதரான சிவப்பிரகாசத்தைக் கண்டதும் அல்லியும், அரிச்சுனனும் குரைத்து ஊளையிட்டன. அந்த அருவருப்பான கிழட்டுக் குட்டை நாய்களைக் கண்டதும் சிவப்பிரகாசம் விசர் நாய்களோவெனப் பயந்து போய்விட்டார். ஆனால் அவர் கேள்விப்பட்டளவில், நாக்கைத் தொங்க விட்டு வீணம் வழிந்தொழுக, வாலையும் கீழே தொங்கப் போட்டபடி — ஆகிய விசர் நாய்களுக்குரிய குணங் குறிகளொன்றும் தென்படவில்லை. ஆனால் அந்தப் 'பீரியெட்டை' அணுகி வந்துவிட்டதாக அவருக்குப்பட்டது.

"என்ன மான் இதுகள்?... இதுகளைத்தான் இந்த வீட்டிலை வளர்க்கிறியளா? உடனடியாக இதுகளைப் பிடிச்சுக் குடுத்திட வேணும் மிஸ்ற்றர் சேனபதி. இமீடியற்லியூ மஸ்ற் டு இற். பார்க்கவே ஒரே அருவருப்பாக இருக்கு... எந்த நேரத்திலையும் இதுகளுக்கு விசர் வரலாம்."

"நாளைக்குப் பிடிச்சுக் குடுக்கத்தான் போறன் சேர். அவங்களை வரச் சொல்லியிருக்கிறன்..." என்ருன் சேனபதி உமிழை மென்று விழுங்கியபடி.


"வெட். இதார் இந்த ஓல்ட் மான்?... தோட்டக்காரஞ? ரூ ஓல்ட்... இவனலை என்ன வேலை செய்யமுடியும்?"

"கிழுன் பட்கர்..." சேனபதி சொல்ல விரும்பாத அந்தச் சொல்லை அவன் விழுங்கிக் கொண்டே சொன்னதில் பாதியே அவன் வாயிலிருந்து வெளி வந்தது.

"ஓ. ஐ ஸே... இந்தா பார் மிஸ்ற்றர் சேனபதி, இதையெல்லாம் எனக்கேன் முந்தியே சொல்லவில்லை?... அதிலையும், வீட்டுச் சொந்தக்காரங்களோடை குடியிருக்கிறதைப் போலை உபத்திரவம் வேறையொண்டுமில்லை மிஸ்டர் சேனபதி. இதை என்னுடைய அனுபவத்திலை கண்டுவிட்டுத்தான் சொல்லுறன்... அதிலையும், இப்படி ஆளோடை கூட இருந்தால்... சொல்லவே வேணடியதில்லை கண்டீரோ. இப்பிடிச் சொல்லுறனே என்று வித்தியாசமா நினையாதையும். யூ நோ. மை பாதரன்லோ. அவரை உம்முடைய பிரதரன் லோவுக்குத் தெரியும். இந்தக் கிழம் மாதிரித்தான் தோற்றம். அதனலைதான் சொல்லுறன், மற்றக் குணங் குறிகளும் அப்பிடித்தான் இருக்குமென்று நினைக்கிறன். அட்டைத் தரித்திரம். இரவு பகலென்றில்லாமல் ஓரே கறகறப்பும் புறுபுறுப்புமாக ஒருத்தரையும் நிம்மதியாக இருக்க விடாது அறுபதுக்கு மேலை பாஸ் பண்ணினல் எப்பவும் இதுகளாலை அபாயமாகாவென்று கண்டுகொண்டன். ஒருநாள் என்ன செய்தன் தெரியுமோ?... கைதடிக்குக் கூட்டிக்கொண்டு போய் 'ஹோம் போர் தி ஏச்' அதுதான் வயோதிப மடத்திலை நடக்கிற காலட்சேபத்தைக் காட்டினம். அவருக்கும் ஒருமாதிரி மனப்பதிவு ஏற்பட்ட மாதிரித் தெரிஞ்சிது... கையோடை அங்கேயே ஆளை விட்டிட்டு வந்திட்டம்." சிவப்பிரகாசத்தின் இந்தக் கதை முத்தையரைப் பற்றிய குண விசேஷங்களை அறிவதற்காக — கதை கொடுத்துக் கதை வாங்கும் சீ.ஐ.டி பாஷையாகவும் பட்டது. ஆனல் சேனபதி உண்மையையே கக்கி விட்டான்.

"இதுகும் அப்பிடித்தான் சேர் குணங்குறியெல்லாம்... ஆனல் ஊர் உலகம் நாளைக்கு ஒண்டைப் பக்தாக எடுத்துக் கதைக்கும் எண்டுதான்" என்று சேனபதி சொல்ல வந்ததை சொல்லி முடிக்கு முன்பே சிவப்பிரகாசத்தார் குறுக்கிட்டார்.


"வட் மான் ஊரும் உலகமும்?... ஒவ்வொருத்தர் வீட்டிலையும் இப்பிடி ஒவ்வொரு அறளைக் கிழங்கள் கிடந்து கொண்டு நாடோடி புழுமாதிரி சும்மா கிண்டிக்கொண்டு கிடந்தால் ஆருக்கும் அப்பிடித்தான் செய்ய மனம் வரும். இப்ப என்ரை பாதரன்



லோவை எடுத்துக் கொள்ளும் தன்ரை செற் ஆக்களோடை எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறூர் தெரியுமா? ஆளுக்காள் பழைய கதைகளைச் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டும், வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டும் எவ்வளவு குசாலாக இருக்கிறூர் தெரியுமா?... அதுதான் சொல்லுறது. அவரவர் அந்தந்த இடத்திலை அந்தந்த ஆக்களோடைதான் இருக்க வேணும் தண்டிபோ இப்பதான் அவருக்கும் நிம்மதி. எங்களுக்கும் நல்ல நித்திரை வருது உண்மையாகச் சொல்லுறன் மிஸ்டர் சேனபதி, நம்பினுல் நம்பும் நம்பாவிட்டால் போம் எனக்கு அறுபது தாண்டி இஞ்சை கொஞ்சம் அலுவலுப்புடிகினம் என்றவுடனே நேராக அங்கைதான் போவன்''! என்று முடித்தார் சிவப்பிரகாசம்

சிவப்பிரகாசத்தாரின் கதைகள் வெகு ஆழ நீளமுள்ளதாக இருப்பதாகவும், அதே நோக்கில் அந்தக் கதைகள் எதற்குள்ளேயும் அகப்படாமல் விலத்தி நிற்பதாகவும் ஒருவித மனப்பிராந்தி சேனபதிக்கு ஏற்பட்டது. சிலவற்றை சீரியசாகச் சொல்கிறூர். அதே நேரத்தில் சிரிக்கக்கூடியதாகவும் அவருடைய சில கதைகளிருந்தன

சிவப்பிரகாசத்தார் கதைத்த கதைகளில் சில முத்தையருக்கும் கேட்கவே செய்தன கிழவருக்குக் கேட்க வேண்டும் என்ற வார்த்தைகளைப் பலமாகவும் மற்றவைகளை நசுக்கியும் கதைத்துக் கொண்டார் சிவப்பிரகாசம். அந்த நசுக்கல் கதைகளைக்கூட இன்னதாகத்தான் இருக்குமென்று ஊகித்துக் கொண்ட முத்தையர் மொக்கத்தில் அவருடைய சுற்றி வளைப்புக் கதைகளுக்கு இப்படித்தான் அர்த்தங் கற்பித்துக் கொண்டார். 'எல்லோருமாகச் சேர்ந்து இந்த மனிதனின் மூலம் கதைநப்பித்து தன்னை வெளியேற்றவே இவ்வளவு ஏற்பாடுகளும் கதைகளும்' என்பதாக முத்தையர் நினைத்தார். 'பேரப்பிள்ளைகளே செய்யத் துணிந்த காரியத்தை பிறத்தியான் செய்ய கணக்கமா ஏற்படும்?' என்ற நினைப்பும் அவருக்கு வந்தது தனக்காக யாருமே சாதகமாகப் பேசிப் பறையாத தன் விதியின் கொடுமையை எண்ணிக் கலங்கி நின்றூர் முத்தையர். (தொடரும்)




# உழைப்பே உயர்வுக்கு வழி

— மகாத்மா காந்தி

"ஆரோக்கியமான வாழ்வே
ஆனந்தமான வாழ்வு"

"ஆரோக்கிய வாழ்விற்கு
இயற்கை உணவுதான் சிறந்தது"

"இயற்கை வாழ்வு வாழ
பனை வெல்லம் பாவியுங்கள்"

**20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி
மகாத்மா காந்தியின் அழகிய ஸ்ரிக்கர்
ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

## நாளும் நற்பணி செய்திட
## உங்கள் ஆதரவை நாடும்

# "மில்க்வைற்"




பனை அபிவிருத்திச் சபை

ஸ்வர்ணம் பப்ளிஷர்ஸ் 5, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.